காஷ்மீர் சர்க்காரில் வகுப்பு நீதி!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

சென்னை: ஆடி 7௳ வியாழன் (22—7—54)
வெளியூர்: ஆடி 8௳ வெள்ளி (23—7—54)

மலர்: 2
இதழ்: 33

அரசியல் சட்ட விதிக்கு முரண் என ஆதிக்கபுரியினர் ஆர்ப்பாட்டம்!

மன்றமேறி வாதிட கனபாடிகள் மும்முரம்!

காஷ்மீர் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதில், வகுப்பு நீதியை மேற்கொண்டிருக்கிறது பக்ஷி குலாம் அரசாங்கம்.

ஆதிக்கபுரியினரின் பரம்பரைச் சொத்தாக கல்லூரிக் கல்வி இருந்து வந்ததை மாற்றி, ஆதிக்க வகுப்பினருக்கும் கல்வித் துறையில் பின்தங்கியிருக்கிற மக்கள் அனைவருக்கும் சம நீதி வழங்கும் உயர்ந்த நோக்கத்துடன், ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மக்களின் எண்ணிக்கைக்கேற்ப, கல்லூரிகளில் சேர்க்கப்படும் மாணவர்களுக்குள்ளாக, கல்லூரிக் கல்வியைச் சமத்துவமாகப் பகிர்ந்து அளிக்கும் வகுப்பு நீதியை, காஷ்மீர் சர்க்கார் நடைமுறையில் கையாண்டிருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

விளக்கம் தேவைப்படாத புறச்சான்றுகள்:

பொய்! பித்தலாட்டம்! அபாண்டம்!

'தினத்தந்தி' இதழின் இழி செயலுக்குக் குடிமக்கள் கண்டனம்

★

குருவிக்கரம்பை குடி மக்களின் மறுப்புக் கடிதம்

அன்புள்ள "நம் நாடு" ஆசிரியர் அவர்கட்கு, தஞ்சை ஜில்லா பேராவூரணியை அடுத்துள்ள குருவிக்கரம்பை கிராமவாசிகள் எழுதிக்கொண்டது:—

11—7—54ம் தேதி வெளியூர் "தினத் தந்தி" இதழில் "அண்ணாதுரையை அழைக்கப்பட்டது உண்மையே" என்ற தலைப்பின் கீழ் அடியிற் கண்டவிஷயங்களை அபாண்டம் பொய்யாகப் பிரசுரித்திருக்கிறது.

"தஞ்சை ஜில்லா பேராவூரணியை அடுத்துள்ள குருவிக்கரம்பை கிராமத்தில் புதிதாகப் பிள்ளையார் கோயில் கட்டுவதற்கு கிராம முக்கியஸ்தர்கள் முடிவு செய்தனர் என்பதும், தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களை மேற்படி கோயில் கட்டுவதற்கு அஸ்திவாரக்கல் நாட்டுவதற்கு கிராம மக்களின் ஏகோபித்த முடிவின்படி அழைப்பு அனுப்பப்பட்டது என்பதும், அதைக் காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தனர் என்பதும், முற்றிலும் பொய்யும் கற்பனையுமாகும்.

"உண்மையிலேயே எங்களூரில் (குருவிக்கரம்பையில்) பிள்ளையார் கோவில் கட்டுவதற்கான திட்டமோ அதற்கான நிர்வாகக் குழுவோ கிடையாது கோயில் நிர்வாகக் குழுவே கிடையாது ஊரில் நிர்வாகஸ்தர்களில் ஒருவரான, நா. ராமசமித் தேவர் கையொப்பம் போட்ட கடிதம் ஒன்று தினத் தந்தியில் பிரசுரிக்கப்பட்டது கண்டு பெரிதும் வியப்பு அடைந்தோம். இம்மாதிரி இல்லாத ஒன்றை, பத்திரிகையில் பிரசுரிப்பதை "தினத் தந்தி" நிறுத்திக் கொள்ள வேண்டுமென்பதை தாங்களாகிலும் தங்கள் பத்திரிகை "நம் நாட்"டில் எங்கள் அபிப்பிராயத்தை தெரியப்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இங்கனம்,

கே. குழந்தைசாமி, ஆர். சுப்பையா, ரா. ராமச்சந்திரதேவர், க. சிங்காரம், அ. ராமச்சந்திர தேவர், சு மாணிக்க தேவர், சி முத்துச்சாமி தேவர், கே. கே. அருணாசலம், என். ராமசாமி சி. குழந்தைச்சாமி தேவர், சு. நடேசமூர்த்தி, கலியாணசுந்தர தேவர், கா. நடேசன், மு க. முத்துசாமி எஸ். வேலுச்சாமி, வி அருணாசலம், பொ. பன்னீர் செல்வம், பு. சேதுராமன் சேர்வை, கே. ஆறுமுகம், எஸ். வீரப்பன், வி. நடராசன், என். ஜெகநாத், ஜி. பிரகாசன், சு. சோமசுந்தரம், கோ. நரசிம்ம தேவர், செ சோமு.

குருவிக்கரம்பை கிராமவாசிகள்'

★

நமது நிருபர் தோழர் அடைக்கலம் அனுப்பிய கடிதம்

11—7—54 'தினத் தந்தி' பத்திரிகையில் குருவிக்கரம்பையில் பிள்ளையார் கோயில் அஸ்திவாரக் கல் நாட்டு விழாவுக்கு அண்ணாதுரையை அழைப்பதென்ற செய்தி உண்மைதான் என்று வந்த செய்தியை ஒட்டி, குருவிக்கரம்பையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

'தினத் தந்தி'யில் கண்டுள்ள நா. ராமசாமி தேவர் என்பவரே அந்த ஊரில் இல்லை; பிள்ளையார் கோயில் கட்டும் எவ்வித திட்டமும்: இல்லை; அது வெறும் பித்தலாட்டமான செய்தி. தாங்கள் 'தினத் தந்தி'யின் போக்கை வன்மையாகக் கண்டித்து, உடனடியாக எழுதும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குருவிக்கரம்பை வாசியாகிய வி வயிரவதேவரிடமும் 'தினத் தந்தி' செய்தி ஆதாரமற்றது என்பதற்கு கடிதமும் வாங்கி இத்துடன் அனுப்பி இருக்கிறேன். அதை தயவு செய்து பிரசுரிக்கவும் மேலும் மேற்படி கிராம மக்களிடம் (முக்கியஸ்தர்) மகஜர் ஒன்றும் வாங்கி இத்துடன் அனுப்பி இருக்கிறேன். இவைகளையும் தாங்கள் பார்த்து, தகுந்த மாதிரி பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி வயிரவ தேவர் நமக்கு அனுப்பியதன் காப்பியை 'தினத் தந்தி'க்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

(ஒப்பம்) கு அடைக்கலம்

காங்கிரஸ் முக்கியஸ்தர் வி. வயிரவத்தேவர் அவர்கள் கடிதம்

V Vairava Thevar,

PADDY & RICE MERCHANT, PERAVURANI.

L. No. O. 1962.
Prop:
V. R. NATHAN RICE MILL.

Peravurani (S. Ry)
Date 11-7-54

அன்புள்ள 'நம் நாடு' ஆசிரியர் அவர்கட்கு,
தஞ்சை ஜில்லா பேராவூரணியை அடுத்துள்ள குருவிக்கரம்பை வாசியும், தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி மாஜி மெம்பரும், பேராவூரணி உயர்தரப் பள்ளி கட்டடக் கமிட்டி தலைவருமான V. வயிரவதேவர் எழுதியது.

11-7-54 "தினத் தந்தி" இதழில் "அண்ணாதுரையை அழைக்கப்பட்டது உண்மையே" என்ற தலைப்பின் கீழ் அடியிற் கண்ட விஷயங்களை அபாண்டப் பொய்யாகப் பிரசுரித்திருக்கிறது.

தஞ்சை ஜில்லா பேராவூரணியை அடுத்துள்ள குருவிக்கரம்பை கிராமத்தில் புதிதாகப் பிள்ளையார் கோயில் கட்டுவதற்கு கிராம முக்கியஸ்தர்கள் முடிவு செய்தனர் என்பதும், அதற்காக நிதி திரட்டப்பட்டது என்பதும், திமுக. பொதுச் செயலாளர் அண்ணாதுரையை அக்கோயில் கட்டுவதற்கு அஸ்திவாரக்கல் நாட்டுவதற்கு கிராம மக்களின் ஏகோபித்த முடிவின்படி அழைப்பு அனுப்பப்பட்டது என்பதும், அதைக் காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தனர் என்பதும் முற்றிலும் கற்பனையும் பொய்யுமாகும்.

உண்மையிலேயே எங்களூரில் குருவிக்கரம்பையில் பிள்ளையார் கோயில் கட்டுவதற்கான எவ்வித திட்டமும் இல்லை. அதற்கான நிர்வாகஸ்தர்களும் இல்லை. நிர்வாகஸ்தர்களில் ஒருவரான நா. ராமசாமித் தேவர் என்பவர் எங்களூரில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

V. Vairava Thevar
11-7-54

மு. கருணாநிதி

தோழர் மு. கருணாநிதிக்கு சின்னாட்களுக்கு முன் திருச்சி அருகே நிகழ்ந்த கார் விபத்து ஒன்றில் அடிபட்ட அவரது நாசியில். சேர்ந்துக் கொண்டிருந்த சீழ், துளைத்து எடுக்கப் பட்டது. அதனால் மூக்கிலிருந்து சிறிது ரத்தப் பெருக்கும் ஏற்பட்டது.

இன்னும் சில தினங்களில் முழு குணம் ஏற்பட்டுவிடும் என்றும் அதுவரை ஓய்வாக இருக்க வேண்டும் என்றும் டாக்டர் அறிவித்துள்ளார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 22—7—54 வியாழன்

தோற்பது நிச்சயம்!

★

பல இனம், மொழி, கலாசாரம், பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ள பல்வேறு பிரிவினர் வாழ்ந்து வரும் ஒரு பெரிய நிலப் பரப்பாக இந்தியா இருந்தது—இப்பொழுதும் இருந்து வருகிறது என்பதை, வரலாற்று அறிவு படைத்த எவரும் ஒப்புக் கொள்வர்.

வரலாறு கற்றறியாது புராணப் படிப்பு மட்டுமே பெற்றிருப்பவர்களுக்குக்கூட, இந்த உண்மை தெரிந்தே இருக்கிறது.

இந்தியாவின் பெரிய நிலப் பரப்பையும், அதில் உள்ள பல்வேறுபட்ட வாழ்க்கை நோக்கங்களையும் நடைமுறைகளையும், மேற்கொண்டு ஒழுகி வரும் மக்கள் பிரிவுகளையும் மூலமாகக் கொண்டு பார்க்கும்பொழுது, இந்தியாவை ஒரு நாடு எனக் கூறுவதிலுள்ள பொருத்தத்தைக் காட்டிலும், ஒரு துணைக் கண்டம் எனக் கூறுதற்கே பொருத்தம் மிகுதியாக இருக்கிறது என்பதை, ஒவ்வொருவரும், கண்டிப்பாக ஏற்றுக் கொண்டே தீரவேண்டும்.

இந்தியா என்ற பெயரே, இந்தியாவில் வழங்கப்பெறும், எந்த ஒரு பழம் பெரும் இலக்கியத்திலும் காணப்படவில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். இந்தியா என்ற பெயரே, இந்தத் துணைக் கண்டத்திற்கு, இங்கு படையெடுத்து வந்த வெளி நாட்டவரால் இடப்பட்டதாகும்.

இப்பரந்த துணைக் கண்டத்தை, சிறுகச் சிறுக ஒரே அரசியல் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தவர்களும், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள்தான் என்பதை, எவராலும் மறுக்கவொண்ணாத நிலையில், வரலாறு வலியுறுத்திக் கொண்டு இருக்கிறது. இந்தியா என்ற பெயர், தங்கள் மூதாதையர்களால் சூட்டப்பட்டதாக இல்லாமல் இருக்கிறது என்ற காரணத்திற்காகவோ என்னவோ இந்தி ஏகாதிபத்திய வெறியர்கள், தாங்களே பெருந்தொகையினராக இருந்து, தங்கள் விருப்பம் போல் உருவாக்கி வைத்துள்ள அரசியல் சட்டத்தில், 'பாரத்' என்ற 'புனிதம்' நிறைந்த பெயரை, உலக வழக்கில் உள்ள இந்தியாவிற்கு இட்டு மகிழ்கின்றனர்!

பல இனம், மொழி, கலாசாரம், மாறு ஆகியவற்றில் மாறுபட்டுக் காணப்படும் பல்வேறு பிரிவுகளைக் கொண்ட மக்களாக இங்குள்ளோர் இருந்த போதிலும், அந்தப் பிரிவுகள் அனைத்தும், வரலாறு கண்டு இரண்டு பெரும் பிரிவுகளுக்குள் அடங்கி விடுகின்றன. அந்த இரண்டு பிரிவுகள்தான், ஆரியம்—திராவிடம் என அழைக்கப்படுகின்றன. அந்த இரண்டு கலாசாரத்திற்கும் இருந்து வரும் ஒற்றுமைகளைக் காட்டிலும் வேற்றுமைகள்தான் மிகுதியாக இருக்கின்றன என்பதும் வரலாற்றுநூலோர் முடிவாகும் சிற்க,

வெவ்வேறு, முரண்பட்ட வாழ்க்கை இலட்சியங்களை, ஊற்றுக் கால்களாகக் கொண்டு வளர்ந்து வந்திருக்கிற இரு பெரும் சமுதாயத்தை, அப்பாக்கி முனை கொண்டு பிணைத்துப் போட்டனர், தங்கள் சொந்த நலம் கருதி பிரிட்டிஷ் ஆளவந்தார்கள். இருநூறாண்டுகளுக்குக் குறையாமல, தங்கள் அதிகார பலத்தால் வலுக்கட்டாயமாக இணைத்துப் போட்ட இரு பெரும் சமுதாய மக்களிடை ஒத்த மனப்பான்மை உருவாக்கும் பணியினையும், அதே ஆளவந்தார்கள் கைபாண்டும் வந்தனர். அம்முயற்சியின் பலனாக பிரிட்டிஷ் ஆளவந்தார்களின், கள்ள நோக்கமான சுரண்டலில்தான் முழு வெற்றி ஏற்பட்டு இருக்கிறதேயொழிய, இரண்டு பெரும் இனமக்களும் இருநூறு ஆண்டு காலம் இணைந்து இருந்ததினால் ஏற்படுத்தீரவேண்டிய இரண்டு வகையான கலாசாரமும் ஒன்றுகலந்து, அதன் பலனாகப் புதியதோர் கலாசாரம் உருவெடுத்து, மக்களுக்குள் உறவுகலந்து வாழும் நிலைவு, எள்ளத்தனையும் ஏற்படவில்லை.

வெவ்வேறு இன வழிவந்த இரு பெரும் மக்கள் கூட்டம் வாழ்ந்த, இரண்டு பெரும் நிலப் பரப்புகளையும் ஒரே ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து, அக்கட்டுக் குலையாமல் இருநூறு ஆண்டுகாலம் கட்டிக்காத்து வந்தும், இரு இன வழி மக்களின் கலசாரமும் இன்றளவும் கலக்கப்போகாமல் பிரித்தனைக்கும், வொன்னுக்கும் உள்ள இயல்பு போல் பேசப்பட்டுக் கிடக்கிறது என்றால், பிரிட்டிஷ் ஆளவந்தார்களிடமிருந்து 'ஏக இந்தியா'வாகவும் பெற்ற, அதிகாரத்தையும் காணிக்கையாக வாங்கி, ஆதிக்கம் செலுத்தி வருகிற டெல்லி ஆதிபத்திபத்தியத்தால் மட்டும், இத்துறையில் வெற்றி பெற்றுவிட முடியுமா? மேலும் எத்தனை நூறு ஆண்டுகள் அச்சுறுத்தியும், ஆசை காட்டியும் ஆதிக்கம் செலுத்தி வந்தாலும், தென்னாட்டின் மொழி, கலை, நாகரிகம் தாண்டவமாடிக் கொண்டிருக்குமிடத்தில், வடவர் மொழி, கலை, நாகரிகத்தைத், தம்மிடம் தஞ்சம் புகுந்துள்ள அதிகார பலத்தால், வலுக்கட்டாயமாகத் திணித்தாலும், ஆண்டவன் அருள் பெற்ற ஆரிய தவசிரேஷ்டர்களால செய்ய முடியாது புறமுதுகு கண்ட பெருஞ் செயலை, டெல்லி ஆதிக்கத்

தியத்தால் ஒருக்காலும் சாதித்துவிட முடியாது!

ஆரிய முனிவர்களின் தவ பலமும், ஆங்கிலேயர்களின் ஆயுத பலமும், சாதிக்கத் தவறிய ஒரு காரியத்தை, அதாவது திராவிடப் பண்பை சீர்குலைக்கும் தீய காரியத்தை, டெல்லி ஆதிபத்தியத்தால் சாதித்துவிட முடியாது. முக்காலும் தோற்பது நிச்சயம்!

மதமும் கடவுளும் மனிதர் படைப்பே!

ஆண்டவனை வழிபடும் வகை என்ன?

பொதட்டூர்பேட்டை சமுதாய சீர்திருத்த மாநாட்டில்

தோழர் பொன்னம்பலனார் தலைமை உரை

" 'மனிதனே! மானமுள்ளவனே! நாயினும் கீழாய் நலிந்து கிடக்கிறாயே! பறையனாய், பள்ளனாய், தோட்டியாய், தொண்டமானாய், சூத்திரனாய் தன்மானமிழந்து வாழ்கிறாயே! நீ மனிதன் இல்லையா? மானத்தோடு வாழ வேண்டாமா' என்று இந்த நாட்டு மக்களுக்கு விழிப்புணர்வை, தன்மானத்தை ஊட்ட நாம் பாடுபடுகிறோம் என்பதை அறியாமலேயே நமக்கு காட்டப்பட்ட எதிர்ப்புகள் என்ன கொஞ்சமா?"

" ஊருக்குள்ளே சென்றால், 'பார்த்தாயா? இவன்தான் ஜாதி இல்லை என்கிறான்; சாமி இல்லை என்கிறான்' என்று கேலி பேசுவர். கூட்டத்திலே பேச எழுந்தால், அடி ஆட்களை ஏவுவர்; சாணியை வீசி எறிவர்; கல்லால் அடிப்பர்; காயப்படுத்துவர்; கலாட்டா செய்வர். அத்தனையையும் தாங்கிக் கொண்டுதான், அன்று, நாட்டிலோ நாம் மக்களுக்கு சுயமரியாதை உணர்வை ஊட்டினோம்."

10—7—54-ல், பொதட்டூர்பேட்டையில் நடைபெற்ற சித்தூர் மாவட்ட தி. மு. கழக சமூக சீர்திருத்த மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசிய தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

" திராவிடத்தில் — சிறப்பாக தமிழகத்தில், சமீப காலமாக சமுதாயத் துறையில் ஒரு மறுமலர்ச்சியைக் காண்கிறோம். தமிழக மக்கள் தன்மான உணர்வு பெற்று தலை நிமிர்ந்து நடக்க முற்பட்டிருக்கிறார்கள். மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்ற உணர்வு நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இந்த மறுமலர்ச்சியை, விழிப்புணர்வை—தன்மானத்தை, தமிழகம் பெறுவதற்காக நாம்தான், திராவிட இயக்கத்தவர்தான், சுயமரியாதை இயக்கத்தவர்தான் கடந்த 30 ஆண்டு காலமாக இடைவிடாது பணிபுரிந்து வந்திருக்கிறோம். இன்று நமது கொள்கைக்குப் பெரும்பாலோர் செவி சாய்க்கின்றனர். ஆனால், இந்த நல்ல பணியினை நாம் செய்யத் தொடங்கிய காலத்தில் நமது இந்த நல்ல முயற்சியை வரவேற்கவா செய்தார்கள்?

மனிதரிடையே உயர்வு தாழ்வு கற்பித்து உயர்ந்த சாதியினர் உல்லாசமாக வாழவும் தாழ்ந்த சாதியினர் வாழ்விழந்து தவிக்கவுமான நிலைகள் இருப்பது நியாயமா? என்று இருக்கிற உண்மைகளைச் சொன்னால் "சாதிகள் இருப்பது நம்முடைய செயல் அல்ல. ஆண்டவனே இப்படிப் பிரித்துத்தான் படைத்தார். அதை மாற்ற நிலைகளால் ஆகுமா, அதை மாற்றலாமா"? தகுமா? என்றெல்லாம் கேட்டார். பல தொழில் செய்து பலருக்கும் வாழ்வளிப்பவர்களை தாழ்ந்த சாதியினர் என ஒதுக்கிவைத்து "அவர்களைத் தொட்டால் பாவம் அவன் கிட்ட வந்தால் தீட்டு" என்றெல்லாம் கடவுளை ஆக்கினர். கடவுள் எல்லா மனிதர்களுக்கும் தாயும் தந்தையும் என்பது உண்மையானால் அவர் மனிதர்களிடையே உயர்வு தாழ்வு என்று பேதம் கற்பிக்கக் கூடாதே என்று எடுத்துச் சொன்னோம் உயர்வு தாழ்வுகள் எல்லாம் மனிதனால் ஆனவையே அன்றி ஆண்டவனாலோ அன்றி மதங்களாலோ அல்ல.

இந்த நாட்டிற்கு நாடோடிகளாய், வாழ வந்த பார்ப்பனர்கள்தான் இந்த சாதிப் பாகுபாடுகளையும், பேதங்களையும் உண்டு பண்ணினர். அவர்களது மனுதர்ம சாஸ்திரமே அதற்குச் சான்று மனு தர்ம சாஸ்திரம் கற்பித்த நால்வகை வருணங்களும் அவைகளுக்கும் அப்பால் ஆயிரக்கணக்கான சாதிகளையும் உண்டாக்கியது

ஆகவேதான அன்று நாம் சொன்னோம், மனிதனால் உண்டு பண்ணப்பட்ட இந்திய பழக்கங்களைப் பாகுபாடுகளை மனிதர்களாகிய நாம் வெறுத்தொதுக்க வேண்டும். எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம் என்னும் உயரிய கொள்கை தழைக்க வேண்டும் பார்ப்பனர்கள் மட்டும்தான் சாதிப் பித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதல்ல பார்ப்பானுக்கு அடுத்த சாதி நான், அதற்கடுத்த சாதி நான் என்று சொல்லிக்கொள்கிறவர்களும் உண்டு, நமக்கும் கீழே நாலு சாதி இருப்பதனால் நாம் அந்த அளவுக்கு உயர்ந்தவர்தானே என்ற எண்ணத்தால், நான் முதலியார், பிள்ளை, ரெட்டியார், நாயக்கர் என்று சொல்லிக் கொள்கிறவர்களும் உண்டு அவர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்லுகிறோம், சாதிகள் கூடாது என்று.

மிருகங்கள் சில வற்றிடம் காட்டுகிற அளவு அன்பைகூட, தம்மைப் போன்ற மனித வர்க்கத்திடம் காட்ட மறுப்பது எவ்வளவு அருவருக்கத் தக்கது? இந்தத் தாழ்வுகளைக் கற்பிக்கிற சமுதாய நீதி, சாதிய உணர்வு, களையப்பட வேண்டும் என்று நாம் சொல்லி வந்திருக்கிறோம்.

நம் நாட்டில் அடிக்கடி ஏதற்கோ பஞ்சம் வருகிறதே? அந்தப் பஞ்சத்தால் பார்ப்பனர் மட்டும் பாதிக்கப்படுவதில்லையே? ஏன்?

ஒரு நாட்டில் பஞ்சம் என்றால் அந்தப் பஞ்சம நாட்டிலுள்ள ஒரு பகுதியினரை மட்டும் பாதிக்காமலிருக்கிறதே! அதற்குக் காரணம் என்ன? அந்தப் பகுதியினரான பார்ப்பனர்கள், சமுதாயத்திலே உயர்ந்தவர்களாக-வாழ்வில் எல்லாத் துறை வழியும் இருப்பதுதானே அதற்குக் காரணம். இந்த நிலை மாற்றப்படவேண்டுமென்பதில் தவறென்ன?

ஆகவேதான், பார்ப்பனரை உயர்ந்தவன் என்று கருதி உன்னைத் தாழ்த்திக் கொள்ளாதே! அவர்களைச் சாமி என்று கும்பிடாதே! அவர்களையும் உன்னைப்போன்ற ஒரு மனிதன் என்று நினைத்துப் பார்த்து மானத்தைப் போக்கிக் கொள்ளாது சுயமரியாதையுடன் வாழ வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம்.

இன்னும் பலர், கடவுள், கடவுள் என்று சொல்லி, தங்கள் வாழ்வைப் பாழாக்கிக் கொள்கிறார்கள். அநியாயமாக தங்கள் பணங்களை ஒரு கூட்டம் வாழ்வதற்காக வாரி இறைக்கிறார்கள். அவர்களைக் கேட்கிறேன் "நீயும் தான் கடவுள் இருப்பதாகக் கொண்டாடுகிறாய் பார்ப்பனரும்தான் கொண்டாடுகின்றனர். ஆனால் அவர்கள் உன்னைப் போல் வேல் காவடியும் பால் காவடியும் எடுப்பதில்லை. வேப்பஞ்சேலை கட்டிக் கொண்டு ஆடுவதில்லை. நேர்த்திக் கடன் செலுத்த தலையை மொட்டை அடித்துக் கொண்டு, மஞ்சள் ஆடை அணிந்து ஆண்-பெண்ணாக ஊர்வலம் வருவதில்லை. உண்டியலில் காசுபோட்டு அதற்காக அதையும் கொட்டுவதில்லை ஏன்"? இதை எல்லாம் நம் மக்கள் சிந்திக்க வேண்டாமா?

கடவுள் இருக்கட்டும், வேண்டாமென்று கூறவில்லை; அவன், அன்பாய்—அருளாய் — அறமாய் —அறிவாய் இருக்கட்டும். அவனுக்கு பாலும், பழமும், தேங்காய் மூடியும், நெய்வேதியமும், ஆறுகால பூசையும், அக்காரவடிசிலும், இலட்சக்கணக்கான ரூபாயில் கோவிலும் குளமும், கொண்டாட்டமும் தேவைதானா? இல்லையே! அந்த ஆண்டவன், உன்னையும், உலகத்தில் உள்ள அத்தனையும் படைத்தவன் அவனே கூறு சொல்லிவிடு அவனுக்கே, உன் வாழ்வை, உழைப்பைக் காணிக்கை தருகிறேன் என்கிறாயே? எவ்வளவு கேவலம்?

கடவுளை நீ வழிபடுவதெல்லாம், "உன்னைப்போல் எனக்கு அறிவைத்தா; மானத்தைத்தா; என்னையும், இந்த உலகத்தையும் நன்றாக வாழவை; என் உள்ளத்தில் கள்ளங்கபடு இல்லாமல் செய்; பொறாமையை, ஏமாற்று வித்தையை எனக்குத் தராதே" என்று வேண்டிக்கொள். உன் மனச்சாட்சிப்படி, எது சரி, எது தப்பு என்று பகுத்தறிந்து பிறருக்கு கெடுதல் செய்ய நினைக்காது, நல்வழியே வாழ முற்படு அதுதான் கடவுளை வழிபடும் சரியான முறை" — என்று தோழர் பொன்னம்பலனார் அவர்கள், கடவுள் பெயர் கூறி இந்த நாட்டில் நடைபெறும் கொடுமைகளைச் சாடியும், அவைகளிலிருந்து, அந்த கடவுள், புராண இதிகாச மூடப் பழக்க வழக்கங்களிலிருந்து மக்கள் விடுபட வேண்டியதன் அவசியம் குறித்தும் விளக்கமாகப் பேசிவிட்டு ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என இருக்கும் அவல நிலை மாற்றப்பட்டு ஆணும் பெண்ணும் சரிநிகர் சமமாக வாழவேண்டிய கட்டாயம் குறித்தும், தெளிவாகப் பேசினார்கள். அவரது தலைமை உரை, தி. மு. கழகம், சமுதாயத்தில் காண விரும்பும் மறுமலர்ச்சியின் படப்பிடிப்பாக இருந்தது. நமது இயக்கப் பிரச்சாரம் அதிகமாக இல்லாத பொதட்டூர் பகுதி மக்களிடை, பொன்னம்பலனார் அவர்களின் சொற்பெருக்கு ஒரு விழிப்புணர்வை உண்டுபண்ணியதென்றால் மிகையாகாது.

தென் கிழக்கு ஆசிய சமாதானத்திற்கு

பர்மிய பிரதமர் தரும் திட்டம்

ரங்கூன், ஜூலை 19—

"ஒரு மூன்றாவது உலக யுத்தம் மூளுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. ஆங்கிலேய, அமெரிக்க, ரஷ்ய, சீன கோஷ்டிகள், ஒன்று மற்றொன்றை அழித்துவிடுமோ என்ற சந்தேகத்தால் தங்களை வருத்திக் கொண்டிருப்பதால், உலக யுத்தம் ஏற்படாது தடுப்பது மிகச் சுலபமான வேலை அல்ல.

"தென் கிழக்கு ஆசியாதான் அந்த யுத்த அபாயத்திற்கு இலக்கான இடமாக உள்ளது."

—என்று பர்மியப் பிரதமர் யூ-நு கருத்தறிவித்தார்.

ஆங்சான் உள்ளிட்ட ஏழு பர்மியத் தலைவர்கள் ஏழாண்டிற்கு முன் சுட்டுக் கொல்லப்பட்டனர் அல்லவா? அந்த தியாகிகள் தினத்தன்று நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் யூ-நு மேலும் சொன்னார்:—

தென் கிழக்கு ஆசியாவின் சமாதானம் காண, நான்கு அம்சங்கள் கொண்ட ஒரு திட்டத்தை, கிழக்கத்திய மேற்கத்திய வல்லரசுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த நான்கு அம்சத் திட்டமாவது (1) தென் கிழக்கு ஆசிய நாடுகள் எல்லாம் சுதந்திரம் பெற்றவையாக இருக்க வேண்டும் (2) அந்த நாடுகளின், மக்களின் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்களே தலைவர்களாயிருக்க வேண்டும்; அயல்நாட்டுப் பலத்தால் ஆட்சியிலிருப்பவர்கள் தலைவர்களாக இருத்தலாகாது. (3) அந்நாட்டிற்குகந்த வகையில், தங்களது மக்களின் நலன் கருதித் திட்டங்களை இத்தலைவர்கள் தீட்ட வேண்டும். (4) இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நிபுணர்களும் பொருள்களும், பரஸ்பரம், உதவுபவர்களும் உதவி பெறுபவர்களுக்கும் சாதகமாக அமையும் விதத்தில் கிடைத்தல் வேண்டும்.

இதுதான் பர்மிய பிரதமரின் நான்கு அம்சத் திட்டம்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கம்யூனிசத்தை நாம் விரும்பாததினால், இந்த அமைப்பைத் தடுக்க நாமாக ஆனதை எல்லாம் செய்வோம். ஆனால் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளை தடுப்போம் என்ற எண்ணம் நமக்கு இல்லை.

'மகலவினைக் கண்ட டனி அணி' என லஞ்சமும், ஊழலும், மா-சே-துங்கின் தலைமையில் உள்ள சீனாவில் மறைந்துவிட்டன. இந்த நல்ல குணங்களை ஆசியர்கள் என்ற முறையில் நாம் பாராட்டுகிறோம். சீனாவில் கடந்த காலத்தில், பெரும்பணக்காரர்களே போகபோக்கியத்தில் புரளவும் சுகமாக வாழவும் முடிந்தது. கோடிக் கணக்கான மக்கள் வாழ்விழந்திருந்தனர். ஆனால், இன்று நிலைகள் மாறி உள்ளன. மக்களுக்காக, சீனத் தலைவர்கள் பெரும் பிரயாசம் புரிகின்றனர். ஒரு புதிய உலகத்தையே சிருஷ்டித்து வருகின்றனர். ஆசியர்கள் என்ற முறையில், இந்தப் பெரும் மாறுதலைக் காண நாம் மிகவும் பரவசப்படுகிறோம்," என்று குறிப்பிட்டார்.

அறப்போர்

வருகிற வெள்ளிக்கிழமை முதல், திருவாங்கூர் தமிழ்நாடு சத்தியாக்கிரகிகள் கோர்ட்டுகளின் முன்பு மறியல் செய்வார்கள் என்று தெரிகிறது.

செங்கற்பட்டு மாவட்ட தூத்துக்குடி நிதி வசூல் விவரம்

பூந்தமல்லி நாடகம் மூலம் வரவு	ரூ 410—0—0
பல்லாவரம் நாடகம் மூலம் வரவு	ரூ 500—0—0
காஞ்சிபுரம் தி.மு.க. பொதுக் கூட்டத்தின் மூலம் வரவு	ரூ 40—3—10
மீஞ்சூர் தி.மு.கழகம் மூலம் வரவு	ரூ. 23—0—0
பொன்னேரி தி.மு.க. மூலம் வரவு	ரூ 25—0—0
செய்யூர் தி. மு. க. நாடகம் மூலம் வரவு	ரூ. 25—0—0
காஞ்சிபுரம் நகர தி. மு. கழகம் நாடக மூலம் வரவு	ரூ. 700—0—0
மேற்படி பொதுக் கூட்டமூலம் வரவு	ரூ 200—0—0
பரங்கூர் தி. மு. கழகம் மூலம் வரவு	ரூ 15—0—0
அய்யம்பேட்டை தி. மு. கழகம் மூலம் வரவு	ரூ. 19—8—3
ஆகமொத்தம் வரவு	ரூ 1957—12—1

பி.-சோ. கட்சி போராட்டம்

2,000 பேர்வரை கைதாயிருக்கின்றனர்

லக்னோ, ஜூலை 19—

நீர்ப்பாசன வரி உயர்தப்பட்டிருப்பதை எதிர்த்து, உத்திரப் பிரதேசத்தில் பி. சோ.-க்கள் நடத்திவரும் கிளர்ச்சியில் 14 மாவட்டங்களிலுமாக இதுவரை இரண்டாயிரம் பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக, பி. சோ. கட்சி தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

நேற்று பாடசாலை எனும் இடத்திற்கு 'அடக்குமுறை எதிர்ப்பு தின'க் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளச்சென்ற பி சோ கட்சியைச் சேர்ந்த 90 தொண்டர், விசேட அதிகாரச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனரென்றும் அறிவிக்கப்படுகிறது.

நேற்று உள்நாட்டு மந்திரி இல்லத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்த சமாஜ்வாதி யுவக் சபாவைச் சேர்ந்த பனிரண்டிற்கு அதிகமான தோழர்கள் இன்றும் சர்க்கார் காரியாலயத்திற்கு முன் கூடி, கோஷங்களுடன் ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களை காரியாலயங்களினுள் நுழையவிடாது செய்ய கதவுகளை தாளிட்டு மூடிக்கொண்டு போலீசார் பாதுகாத்தனர். பிறகு தொண்டர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

உத்தர பிரதேச சட்ட சபையில் பி சோ. சட்டசபைக் கட்சியின் தலைவரான தோழர் நாராயணன், தன் மற்ற சட்டசபை எதிர்க் கட்சியினருக்கு அனுப்பிய சுற்றறிக்கைகளையும், தந்திச் செய்திகளையும் சர்க்கார் அதிகாரிகள் சோதனை செய்து, தடுத்து வைப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

தூதுக் குழு

ஆகஸ்டு திங்கள் மத்தியில், இந்தியக் கலாச்சார குழு ஒன்று ரஷ்யாவில் ஆறு வார காலம் சுற்றுப் பயணம் செய்யுமென்று தெரிகிறது

மணிமுத்தாறு அணைக்கட்டில்...

தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்!

அம்பாசமுத்திரம், ஜூலை 20—

மணிமுத்தாறு அணைக்கட்டுத் தொழிலாளர்கள் நேற்று திடீரென வேலைநிறுத்தம் செய்தனர். அணைக்கட்டு எஞ்சினியர், அவர்களின் கோரிக்கையைக் கவனிப்பதாக உறுதியளித்ததும் மீண்டும் வேலைக்குத் திரும்பினர். அவர்கள், தங்களுக்குத் தரப்பட்ட கூலி விகிதம் சென்ற வாரம் முதல் குறைக்கப்பட்டதை எதிர்த்தே வேலைநிறுத்தம் செய்ததாகத் தெரிகிறது

சர்க்கார், கண்ட்ராக்டர்களுக்குக் குறிப்பிட்ட தொகையைக் குறைத்திருப்பதால், அவர்களும் தொழிலாளர்களின் கூலியைக் குறைத்தனராம். 30 கன அடி செங்கல் கட்டிட வேலைக்கு ரூ 15 ஆக இருந்த கூலியை ரூ. 14 ஆகக் குறைத்தனராம்.

முன் அறிவிப்பின்றி கூலியைக் குறைத்த காண்ட்ராக்டர்களின் போக்கும், முன் அறிவிப்பின்றி வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களின் போக்கும் சரியானவை அல்ல என்று சொல்லப்படுகிறது.

இப்போது, பழைய கூலியே இந்த வாரம் முடிய தருவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது.

அசம்பாவிதம் ஏதும் நேராமலிருக்க அந்தப் பகுதியைப் போலீசார் கண்காணித்து வருகின்றனராம்.

எஸ். எஸ். எல். சி.

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் தேறிய மாணவர்களின் பட்டியல் ஒன்றை ஆந்திர பல்கலைக் கழகம் சீக்கிரமே பிரசுரிக்குமென்று தெரிகிறது இதன் ராயலசீமையைச் சேர்ந்த 1,000 மாணவர்கள் பயனடைவர்.

நகர மன்ற ஊழியரை விலக்கியதின் எதிரொலி

சுகாதார அதிகாரிகள் குத்திக் கொல்லப்பட்டனர்!

புதுடில்லி ஜூலை 15—

மேற்படி நகராட்சி மன்ற சுகாதார அதிகாரியையும், சுகாதார மேற்பார்வையாளரையும், அதே நகர சபை ஊழியராக வேலை பார்த்து வந்தவரும், மேற்படி அதிகாரிகளால் தற்காலிகமாக வேலையிலிருந்து விலக்கி வைக்கப் பட்டுள்ளவருமான ஒருவர், கத்தியால் குத்திப் படுகாயப் படுத்தினர்.

அவர்கள் மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டனர். நான்கு தினங்களிற்குள், மருத்துவ நிலையத்தில் அவர்கள் இறந்து விட்டனர்.

அவர்களைக் குத்திய ஊழியர், போலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கழகச் செய்திகள்

ஆத்தூர்வட்டார தி.மு.க.

18-7-54 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு ஆத்தூர் வட்டார தி. மு கழகப் பிரதிநிதிகள் கூட்டம் செம்பட்டி முசாபரி பங்களாவில் சின்னாளபட்டி தோழர் என் சேதுபதி தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. அய்யம்பாளையம் வி. இராசமணி செயலாளராகவும், சின்னாளபட்டி பி என். எம். சவுடய்யா, துணைச் செயலாளராகவும், வண்ணம்பட்டி என். ஜோசப் பொருளாளராகவும், ஆத்தூர் என். பி. சுந்தரபாண்டியன், சித்தையன் கோட்டை டி. காசிநாதன் மலைக்கனூர் து தம்பித்துரை விளம்பர உறுப்பினர்களாகவும், செயற்குழு உறுப்பினர்களாக கிளைக் கழகங்களிலிருந்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கப்பட்டது.

திருமங்கலம் தி. மு. க.

11—7—54 மாலை 7 மணிக்கு நகர் பந்தடித் திடலில் தோழர் மு. கா. சிக்கந்தர் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது அதுபோது தோழர் எம். எம். மெத்தா, மதுரை எம். ஆர். கணேசன, எம். ஏ இரசாக், எம். பிச்சை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்பு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கணபதிபாளையம் தி.மு.க.

18—7—54-ல் செயற்குழு தேர்தல் கூட்டம் தோழர் இராமநாதன் தலைமையில் கூடியது. கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தி. வீரஅரசு செயலாளராகவும், சு சீனிவாசன் துணைச் செயலாளராகவும், கா. சீனிவாசன் பொருளாளராகவும், கா. ராமசாமி மாவட்ட உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொள்ளாச்சி தி. மு. க.

11—7—54 ஞாயிறு கழகப் புது ஆண்டு தேர்தல், தோழர் சர்க்கார் தலைமையில் நடந்தது. இவ்வாண்டு செயலாளராக தோழர் அ. சு. பாலு அவர்களையும், துணை செயலாளராக சிதரன் அவர்களையும், பொருளாளராக விசயராகவனையும் தேர்ந்தெடுக்கப்பட்டது

உலிபுரம் தி. மு. கழகம்

11—7—54 ஞாயிறன்று மாலை 7½ மணியளவில் கழகக் கட்டிடத்தில் செயற்குழுக் கூட்டம் கூடியது. அதுபோது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது பின்னர் வரவு செலவு கணக்குகள் பார்த்தபின் கூட்டம் இரவு 9½ மணியளவில் முடிந்தது.

கணபதிபாளையம் தி. மு. கழக ஆரம்ப விழா

18-7-54ல் தி. மு க. ஆரம்ப விழா தோழர் காளியப்பன் தலைமையில் நடைபெற்றது. ப நாராயணன், இரா. தங்கவேலு, ஜா. துரை, மாணிக்கம், மீரசா ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள் உடுமலை வட்டார செயலாளர் தோழர் இராமநாதன் கொடியேற்றினார்.

தி.மு.க. பொதுக்கூட்டம்

ஸ்ரீவைகுண்டம், ஜூலை 18—

மாவகுளம் தோழர் தனசேகர் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் அத்துக்குடி தோழர் கே. வி. கே. சாமி தோழர் என். நடராஜன் ஆகியோர் பேசினார்கள்.

திருமணங்கள்

7—7—54 புதன் இரவு 7-30 மணிக்கு திசையன்விளை தோழர் வே. சடையமுத்து — தோழியர் நாகலெட்சுமி திருமணம், இவ்வூர் பெரியோர்கள் முன்னிலையில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது-வரப்பெற்றோம் — நன்றியுடையது— பொறுப்பாளர்.

* * *

8—7—54 காலை 8 மணிக்கு மேல் பொன்மலை மேலக்கல்கண்டார் கோட்டையில் தோழர் மு. மாணிக்கம்—தோழியர் இலஞ்சியம் சீர்திருத்தத் திருமணம் மணமகன் இல்லத்தில் நடைபெற்றது. திருமணத்தைப் பாராட்டி, தோழர்கள் ராஜு, ஜி பராங்குசம், அம்பில்-தருமலிங்கம், டி. கே. சீனிவாசன், ஆகியோர் பேசினர். திருமணத்தின் நினைவாக உள்ளூர் கிளைக் கழகத்திற்கு ரூ 2 அளிக்கப்பட்டது. 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ 2 அன்பளிக்கப்பட்டது-வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

14—7—54ல் ஆலமரத்துப் பட்டி கிளைக் கழகச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்திக்கும் — தோழியர் சாந்தாவிற்கும் எம். கந்தசாமி எம். எல் ஏ. அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் வி. என். நடேசனார், பி. எம். குப்புசாமி, நரசிம்மன், முருகேசன் ஆகியோர் சீர்திருத்தத் திருமணத்தைப் பற்றி சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிக்கப்பட்டது-வரப்பெற்றோம் — நன்றியுடையது— பொறுப்பாளர்,

* * *

15—7—54ல் கீழ்விசாரத்தில் தோழர் ஜெயவேல் தலைமையில், தோழர் மாணிக்கத்திற்கும் — தோழியர் வரதம்மைக்கும் திருமணம் நடந்தேறியது. திருமணத்தைப் பாராட்டி தோழர்கள் ஏ. எல். சி கிருஷ்ணசாமி, எம். ஏ. அம்பிகாபதி ஆகியோர் பேசினர். பல தோழர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்-நன்றியுடையது-பொறுப்பாளர்.

* * *

15—7—54ல், ஈரோடு நகராண்மைக் கழக உறுப்பினரும், சமதியக்கத் தோழருமான கை. சின்னப்பன்—தோழியர் தனம் இவர்கள் பதிவுத் திருமணம் பெரியார் நகர மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்றது. துணைப் பதிவாளர் திருமணத்தை சட்ட முறைப்படி பதிவு செய்தார்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில், மணமக்களைப் பாராட்டி தோழர்கள் கே. வி. வாசுதேவன், எம். ஏ. ஈஸ்வரன், குப்புசாமி, ஈ வெ. சுப்பிரமணியம், என். ஆர். சந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இறுதியில் தோழர் ஈ. வே. கி. சம்பத், அன்னாரது பதிவுத் திருமணம் குறித்தும், தோழர் சின்னப்பன் அவர்கள் திருமணம் செய்துகொண்ட கொள்கைப் பற்றும், குறித்துப் பேசினார்கள். பெரியார் ராமசாமி, சி. பி சிற்றரசு ஆகியோர்கள் வாழ்த்துத் தந்திகள் அனுப்பினார்கள். மணமக்களைப் பாராட்டி பரிசுகளும், வாழ்த்துகளும் அளிக்கப்பட்டன.

திரு-கொச்சி நில உரிமைக் கட்டுப்பாடு

தேசிய திட்டக் குழு உறுப்பினர்களுடன் ஆலோசனை

திரு—கொச்சி சட்டசபையில் நில உரிமை சம்பந்தமுடைய ஏழு மசோதாக்களைக் கொண்டுவர, ம சோ, க. அமைச்சர் குழு முன் வந்திருக்கிறது. அம்மசோதாக்களைக் குறித்து, டெல்லியில் உள்ள தேசியத் திட்டக் குழு உறுப்பினர்களுடன், திரு—கொச்சி நிதி அமைச்சர் நடராஜன் பிள்ளையும், சர்க்கார் சட்டத்துறை செயலாளரும் கலந்து ஆலோசித்து வருகின்றனர்.

எந்த அளவு நிலங்களுக்குச் சொந்தக்காரராக ஒருவர் இருக்க வேண்டும் என்பதை முடிவுகட்டும் வகையில் மசோதாக்கள் இல்லையானாலும், எந்த அளவு நிலங்கள் மீது ஒருவர் தற்காலிக உரிமை பெற்றிருக்கலாம் என்பதில் வரம்பு கட்டுவதாகவே மசோதாக்கள் உள்ளன.

நிலச் சொந்தக்காரர்களுக்கும், உண்மையில் நிலத்தில் பாடுபடுகிறவர்களுக்கும் இடையில், இடைத் தரகர் ஏற்பாட்டைக் கொண்டதாக இருந்துவரும் 'ஜென்மி' முறையின் அடிப்படையை அறவே அகற்றுவதற்கு பதிலாக, நிலத்தில் உழைக்கும் உழவர்களிடமிருந்து பெறப்படும் குத்தகைத் தொகையில் மாறுதல் செய்வதையே, குறியாகக் கொண்டிருக்கிறது சர்க்கார்.

இணைப்புக்கு முன், திருவாங்கூரிலும், கொச்சியிலும், தனித் தனியாக நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டிருந்த நில சீர்திருத்த ஏற்பாடுகளை, திரு—கொச்சி முழுதுக்கும் அமுல் செய்யத்தக்க வகையில், திருத்தம் செய்வதாக, ஐந்து மசோதாக்கள் உள்ளன.

நிலச் சொந்தக்காரர் என்ற முறையிலோ, குத்தகைதாரர் என்ற முறையிலோ ஒருவர் உடைத்தாயிருக்க வேண்டிய, பயிரிடப்பட்ட நிலப் பரப்புகளுக்கு வரம்பு கட்டுவதாக, இரண்டு மசோதாக்கள் இருக்கின்றன.

இந்தக் கட்டுப்பாடுகளின்படி இருபோக விளைச்சல் நிலம் 15 ஏக்கர் ஒரு முறை விளை நிலம் 22½ ஏக்கர், தென்னந் தோட்டத்திற்காக 15 ஏக்கர் புறம்போக்காக 30 ஏக்கர் ஆகிய அளவு நிலங்களை ஒருவர் வைத்திருக்கலாம். இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு இந்த அளவுகளுக்கு அதிகமாக வைத்திருப்பவர்கள், ஆறு மாதத்திற்குள்ளாக, அதிக நிலங்களை விற்பனை செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவோ செய்யலாம்.

இவ்வாறு அதிக முள்ள நிலங்களை, பறிமுதல் செய்து, நிலமில்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் எண்ணம் எதுவும் சர்க்காருக்கு இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தக் கட்டுப்பாடுகள் ராஜ்ய அரசாங்கம், ஸ்தல ஸ்தாபனம், பொது தர்ம ஸ்தாபனங்கள், டிரஸ்ட்கள், கூட்டுறவு சங்கங்கள், மத ஸ்தாபனங்கள், பெருந் தோட்டங்கள் ஆகியவற்றிடம் உள்ள நிலங்களுக்கு, அமுல் செய்யப்படமாட்டாது.

உலக அரங்கில்

ஜோகன்ஸ்பர்க் :

தென் ஆப்பிரிக்க இந்திய காங்கிரசின் தலைவராக டாக்டர் டாடோவை காங்கிரஸ் தேர்ந்தெடுத்த போதே, காங்கிரசின் தலைவராக இருக்கக்கூடாது என்று தென் ஆப்பிரிக்க சர்க்கார் ஏற்கனவே தடை விதித்திருக்கிறது. இத்தடையை, தென் ஆப்பிரிக்க இந்திய காங்கிரஸ் ஒப்புக்கொள்ள மறுக்கிறது.

பெல்கிரேட் :

எதியோப்பிய மன்னர் ஹெய்லி செலாசி மார்ஷல் டிட்டோவின் விருந்தாளியாக பெல்கிரேடில் ஒரு வார காலம் தங்கியிருப்பார் என்று தெரிகிறது.

ரோசன்லாய் :

ஷெரீப்ட் வீரர் டென்சிங்கும் மற்றும் ஆறு ஷெர்ப்பாக்களும் மலையேறும் பயிற்சிப் பள்ளி ஒன்றில் கல்வி பெற சுவிட்சர்லாந்துக்கு வந்துள்ளனர். இவர்களுடன் டார்ஜிலிங் மலையேறிகள் நிலைய டைரக்டர் மேஜர் ஜயாலும் வந்திருக்கிறார்.

லண்டன் :

பிரிட்டனின் மிகவும் சிறப்பு வாய்ந்த பத்திரிகையான 'டெய்லி எக்ஸ்பிரசின்' அதிபரான லார்டு பீவர் புரூக் அப்பத்திரிகையின் தொடர்பிலிருந்து தன்னை விலகித்துக் கொண்டார் என்று தெரிகிறது.

கொழும்பு :

இந்தோ-சீனாவில் போர் நிறுத்தம் ஏற்பட்டிருப்பதை இலங்கை வரவேற்றிருக்கிறது. "காலனி ஆட்சியின் சவப் பெட்டியில் இதன்மூலம் பலம் வாய்ந்த ஆணி ஒன்று அடிக்கப்பட்டிருக்கிறது" என்று கொத்தலாவலை கூறினார்.

பாரிஸ் :

பிரெஞ்சு சர்க்காருக்கும், வியட் மின் தேசிய தலைவர்களுக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாயின. பேச்சு வார்த்தைகள் நடைபெறும்போதே டுனீஷிய விடுதலைக் கிளர்ச்சியை அடக்க பிரெஞ்சுத் துருப்புகள் சென்றவண்ணம் உள்ளன.

பெர்லின் :

ஜெர்மன் சமுதாய ஜனநாயக காங்கிரசில் கலந்து கொள்ள பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் அட்லி பெர்லின் வந்திருக்கிறார்.

ஹாங்காங் :

இந்தியாவின் கொடிக் கப்பலான 'ஐ. என். எஸ். டில்லி' நல்லெண்ணத் தூது என்ற முறையில் ஹாங்காங் சென்றிருக்கிறது.

கெய்ரோ :

சூயஸ் கால்வாய்ப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுவருவது, எகிப்து தடை செய்கிறது என்று, பிரிட்டன் கூறுகிறதாம். இச்செய்தியை 'அல் அஹ்ராம்' என்னும் கெய்ரோ பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

* * *

சூயஸ் கால்வாய்ப் பிரச்சினையின்னும் அரபு பிரச்சினைகளைத் தீர்த்தால் ஒழிய மத்திய கிழக்கு பாதுகாப்பிற்கான ஒப்பந்தம் ஏதும் வெற்றி பெறாது என்று எகிப்திய பிரதமர் நாசிர் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார்.

விட்டன் :

வியட்நாமின் முன்னாள் அதிபரான பாவோ-டாய் இந்தோ-சீனப் போர் நிறுத்தம் ஏற்பட்டது பற்றி, தனது கருத்தைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

வார்சேல்ஸ் :

பிரெஞ்சு யூனியன் சட்டசபையின் தலைவர் ஆல்பர்ட் சாராட் இந்தோ-சீனப் போர் நிறுத்தத்திற்கு உழைத்த பிரெஞ்சுப் பிரதமர் மெண்டே பிரான்சைப் பாராட்டியுள்ளார். ஆல்பர்ட் இந்தோ-சீனாவின் முன்னாள் கவர்னர் ஜெனரலாவார்.

ஒட்டவா :

இந்தோ—சீனப் போர் நிறுத்தக் கமிஷனில் உறுப்பினராக அழைக்கப்பட்ட கனடா, இந்த அழைப்பை அனுதாபத்துடனும், அவசரமாகவும் பரிசீலனை செய்யுமென்று கனடா வெளிநாட்டு காரியாலயச் செய்தி ஒன்று கூறுகிறது.

முரசொலி ... சென்னை-14

காஷ்மீர் சர்க்காரில் வகுப்பு நீதி!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காஷ்மீர் சர்க்காரின் இப்போக்கு, ஆதிக்கபுரியினரான அரசியல் எதிராளர்களுக்கு அதிகமான ஆத்திரத்தைக் கொடுத்திருக்கிறது.

சர்க்கார் கையாண்டுள்ள வகுப்பு நீதி முறையானது, காஷ்மீர் தேசிய மாநாட்டினுடையவும், சர்க்காருடையவும் மதமாற்ற மனப்பான்மைக்கு, மாறுபட்டானது எனச் சிலரும், இதன் காரணமாகக் காஷ்மீரில் உள்ள 'வகுப்புவாத' சக்திகள் ஆக்கம் பெற்றுவிடக்கூடும் எனச் சிலரும் கருதுகின்றனர்.

அரசியல் குறாடிகளில் ஒருசாரார், இக்கட்டளை, அரசியல் சட்டத்தில் உள்ள 29 (2) பிரிவின்படி தரப்பட்டு இருக்கும், ஒருவரின் அடிப்படை உரிமையைக் கருவறுப்பதாக இருக்கிறது எனக் கூறக் கிளம்பியுள்ளனர்.

பாபரம்பைத் தோற்றுவிக்கும் அளவு, இந்த எதிர்ப்பு வளரக்கூடும் எனவும், அரசியல் சட்ட விதியை துணைக்கழைத்து, உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர, கல்லூரியில் சேர வாய்ப்பு பெறாது ஏமாற்றமடைந்துள்ள மாணவர்கள் முன் வந்துள்ளனர் எனவும் சொல்லப்படுகிறது.

இத்துறையில், அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்ததும், சென்னையில், ஆதிக்கபுரியினர் வெற்றி பெற்றது கருத்தில் கொள்ளத்தக்கது.

வகுப்பு நீதி ஏற்பாட்டை முன் தள்ளி, பக்ஷி குலாம் சர்க்காரைக் கவிழ்க்க, காஷ்மீர் அரசியல் குறாடிகள் முனைவார்கள் என, உறுதியாகக் கூறுவதற்கில்லை.

அனுமந்தையாவின் அமைச்சர் பதவிக்கு ஆபத்து?

அவரை ஒழிக்க வீரண்ணாவின் தீவிர முயற்சி!

ஆகஸ்ட் சிறப்புக் கூட்டத்தில் முடிவு தெரியும்!

பங்களூர், ஜூலை 21—

மைசூர் முதல் அமைச்சர் அனுமந்தையாவிற்கும், பிரதேச காங்கிரஸ் குழுத் தலைவர் வீரண்ணா கௌடாவுக்கும் கசப்பு ஏற்பட்டு பல திங்கள் ஆகிவிட்டன. குழுவின் கூட்டத்தில் மட்டுமல்லாது, சட்டசபை கூட்டங்களிலும், பொதுக் கூட்டங்களிலும், ஒரு கும்பல் மற்றொரு கும்பலைத் தாக்கிக் கொண்டுள்ளன.

முதல் மந்திரி அனுமந்தையா மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவர தமது ஆதரவாளர்களின் கையெழுத்துக்களைச் சேகரித்து வந்தார், பிரதேச காங்கிரஸ் குழுத் தலைவர் வீரண்ணா! அந்த முறை தவறானது எனக் கூறியும், காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவு பெறும் தீர்மானத்தைப் பெற அனுமந்தையா முயற்சிப்பதுதான் ஒழுங்கான முறையெனவும், அ. இ. கா. தலைவர் பண்டிதரே, இரு தலைவர்களுக்கும் இரகசிய கடிதம் எழுதி இருந்தார். அதன்படி, ஆகஸ்ட் திங்களில் நடைபெற இருக்கிற காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் சிறப்பு கூட்டத்தில், தம்மீது நம்பிக்கைத் தெரிவிக்கும் தீர்மானத்திற்கு ஆதரவு பெற அனுமந்தையா முயற்சிப்பார் எனத் தெரிய வருகிறது.

இரண்டு கும்பலுக்கும் ஒற்றுமையை உண்டாக்க, காங்கிரஸ் குழுத் தலைவர் உள்ளிட்ட ஐவர்களையும், முதல் மந்திரி உள்ளிட்ட ஐந்து மந்திரிகளையும் கொண்ட ஒரு 'ஒத்துழைப்புக் குழு' அமைத்து ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்த்துக்கொள்ள முயல வேண்டும் என, இரண்டு கோஷ்டியையும் நேரில் சந்தித்து அ. இ. காங்கிரஸ் பொதுச் செயலர் ஸ்ரீமன் நாராயண் அகர்வால், ஏற்கனவே, ஆலோசனை கூறியுள்ளார். நடைமுறையில் வெற்றியளிக்காதென இரண்டு கோஷ்டியினரும் கருதி, அந்த ஏற்பாட்டைப் புறக்கணித்து விட்டனர்.

ஆந்திராவில், கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்த, மாஜி மாமேயரின் சத்தியாக்கிரகத்தை வாபஸ் பெறுமாறு, ஆந்திர முதல் அமைச்சர் பிரகாசம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்தோ-சீனா இரண்டானதற்கு எதிர்ப்பு?

அமெரிக்க வெள்ளை மாளிகை முன் மாணவர் மறியல்!

வாஷிங்டன், ஜூலை 20—

இந்தோ—சீனா இரண்டு துண்டாக்கப்பட்டு விட்டது. அமெரிக்காவில் படித்து வரும் வியட்நாம் மாணவர்களுக்கு, இப்படித் துண்டாடப்பட்டது பிடிக்கவில்லை.

வாஷிங்டன் நகரிலுள்ள அமெரிக்க சர்க்கார் காரியாலயமான வெள்ளை மாளிகை முன், வியட்நாமைச் சேர்ந்த மூன்று மாணவர்களும், ஒரு மாணவியும் மறியல் செய்கின்றனர். மேலும் அங்கு படித்து வரும் 20 வியட்நாம் மாணவர்கள், துண்டாடு படுவதை எதிர்க்கும் விளம்பரங்களைத் தாங்கிக்கொண்டு, தங்களுடன் மறியலில் ஈடுபடுவர் என அவர்கள் அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

சென்னை— ஜார்ஜ் டவுன் ... தெரு ... அவர்களால், ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : ... அண்ணாதுரை, எம். ஏ.